விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 26 புதன்கிழமை (10.01.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 22

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

### காணாமல்போதல், கடத்தலை நிறுத்தி

## யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை மீண்டும் இயக்க ஒத்துழையுங்கள்

### துணைவேந்தர், பீடாதிபதிகள் கூட்டாக கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

காணாமல் போதல் மற்றும் கடத்தல் சம்பவங்களை நிறுத்தி குடாநாட்டு மக்களின் அச்சமற்ற வாழ்க்கைக்கும், யாழ்.பல்கலைக் கழத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கும் ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தரும், பீடாதிபதிகளும் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேல், கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், முகாமைத்துவப் பீடாதிபதி க.தேவராஜா, பட்டப்பின் கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி, மருத்துவப் பீடாதிபதி கலாநிதி க.சிவபாலன், விவசாயபீடாதிபதி திருமதி து.மிகுந்தன் ஆகியோர் கூட்டாக விடுத்த அவ் வேண்டுகோளில்,

கடந்த ஐந்து மாதங்களாக கல்விச் செயற்பாடுகள் அற்றிருக்கும் (4 ஆம் பக்கம் பார்க்க)

### திருகோணமலையில் 2 போராளிகள் வீரச்சாவு

திருகோணமலையில் இராணுவத்தினருடன் நடைபெற்ற இருவேறு மோதல்களில் இரு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் நடைபெற்ற மோதலில் திருகோணமலையைச் சொந்த இடமாகக் கொண்ட லெப்.கடற்செல்வன் என்றழைக்கப்படும் கிருஷ்ணபிள்ளை துஷ்யந்தன் வீரச்சாவடைந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு வாகரையை நோக்கி முன்னேற முயற்சித்த இராணுவத்தினருடன் நடைபெற்ற மோதலில் மட்டக்களப்பைச் சொந்த இடமாகக் கொண்ட லெப்.சுபாகரன் என்றழைக்கப்படும் ஜெகநாதன் சிங்கராசா என்ற போராளியும் வீரச்சாவடைந்துள்ளார். (ந-5)

### யாழ்.பல்கலையை இயக்குவதில் பாதுகாப்புச் சிக்கல் உண்டு

### ப.மா.ஆ.குழுத்தலைவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைகழகத்தை மீளவும் இயக்குவதென்பதில் பாதுகாப்பு விவகாரம் பெரும் கவலை தருவதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸி.தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரும் பேரவையும் ஜனவரி 20 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழகத்தை மீண்டும் திறக்க முதலில் விரும்பினார்கள்.

ஆனால், குடாநாட்டில் நிலவுகின்ற பாதுகாப்பற்ற நிலை காரணமாக அத்திட்டம் ஒத்திவைக்கப்பட்டுவிட்டதா என்பது குறித்து இப்போதைக்கு எதுவும் தெரியாது.


யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒருவர் காணாமல் போய்விட்டதாக அறிந்தேன்.

யார் அந்த மாணவனைக் கடத்தி இருப்பார்கள் என்பது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. பல்கலைக்கழத்தைத் திறப்பது என்ற முடிபு துணைவேந்தர் மற்றும் பேரவையைச் சார்ந்து.

அது அங்கு நிலவும் பாது காப்புச் சூழ்நிலையைப் பொறுத்தது என்றும் பேராசிரியர் காமினி சமரநாயக்க பி.பி. ஸிக்கு அளித்த பேட்டியில் கூறினார். (ந-5)

## இந்திய வெளியுறவு அமைச்சர் நேற்று இலங்கை வந்தார்

### இவ்விவகாரம் குறித்து ஜனாதிபதியுடன் பேச்சு



(கொழும்பு)

**இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி இரண்டு நாட்கள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று பிற்பகல் கொழும்பை வந்தடைந்தார்.**

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3ஆம் 4ஆம் திகதிகளில் புதுடில்லியில் நடைபெற ஏற்பாடாகியிருக்கும் சார்க்நாடுகளின் தலைவர்களின் 14ஆவது உச்சிமாநாட்டுக்கு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அழைப்பதற்காக வந்த இந்திய வெளியுறவு அமைச்சரை, இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் பிரசாத் ஆகியோர் கட்டு நாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு சென்று வரவேற்றனர்.

பின்னர் விசேட அதிதிகள் பயணிக்கும் ஹெலிகொப்டரில் கொழும்பிற்கு அழைத்து வரப்பட்ட பிரணாப் முகர்ஜி பிற்பகல் இலங்கை வெளியுறவு அமைச்சரையும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்காவையும் தனித்தனியே சந்தித்து விரிவான பேச்சுக்களை நடத்தினார். (04 ஆம் பக்கம் பார்க்க)

# கருணாகுழுவின் முகாம் மீது வாழைச்சேனையில் தாக்குதல்

## 10 பேர் பலியானதாக தகவல்

மட்டக்களப்பு வாழைச்சேனையில் உள்ள கருணா குழுவின் இரண்டு முகாம்கள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்றிரவு 8.30 மணியளவில் நடத்தப்பட்ட இத் தாக்குதலின்போது கருணாகுழுவைச் சேர்ந்த 10 உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாகவும் நான்கு பேர் வரையில் காயமடைந்துள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் உயிரிழந்த கருணாகுழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை உறுதிசெய்ய முடியவில்லை. இதேவேளை காயமடைந்தவர்களில் மூவர் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பொலநறுவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். —— (ந-5)

# வடக்கு கல்வி அமைச்சுக்கு செயலாளராக இளங்கோவன்

(திருகோணமலை)

வடக்கு மாகாண கல்வி மற்றும் பொது நிர்வாக அமைச்சுக்களின் செயலாளராக எஸ்.இளங்கோவன் வடக்கு மாகாண பதில் ஆளுநர் அட்மிரல் மோஹான்விஜயவிக்கிரமவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக இதுவரை கடமையாற்றினார். வடக்கு கிழக்கு நிர்வாக இணைப்பு பிரிக்கப்பட்டபின் வடக்கு மாகாண கல்வி மற்றும் பொதுநிர்வாக அமைச்சுக்களின் செயலாளராக நியமிக்கப்பட்ட ஆர்.தியாகலிங்கம் நேற்று முன்தினம் ஜனாதிபதியால் கிழக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டதனையடுத்தே இவ் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை உள்ளூராட்சி ஆணையாளராகவும் பதில் சமூக சேவைகள் ஆணையாளராகவும் வடக்கு மாகாணத்திற்கு முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் எஸ்.புண்ணியமூர்த்தியும் கிழக்கு மாகாணத்திற்கு (04 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ நடவடிக்கையில் அரசு தீவிரம் காட்டுகின்றது

## ஐக்கிய தேசியக்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வைக்காணும் முயற்சிகளை மேற்கொள்வதில் அரசாங்கம் தீவிரம்காட்டாமல் இராணுவ நடவடிக்கைகளிலேயே முனைப்புக்காட்டி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

இனப்பிரச்சினைக்குத்தீர்வு ஒருவழியில் மட்டும் தேடப்படவேண்டும். ஆனால் அரசாங்கம் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வென்று கூறிக்கொண்டு போரிலும் முனைப்புக்காட்டுகின்றது. இதன் காரணமாக சமாதான முயற்சிகள் மேலும் பின்தள்ளப்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதுடன்,

வடக்கு கிழக்கு மட்டுமன்றி தெற்கு உட்பட முழு நாடும் ஆபத்தான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவும் அக்கட்சி தெரிவித்திருக்கின்றது.

ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க வெளியிட்டிருக்கும் அறிக்கை (04 ஆம் பக்கம் பார்க்க)


# கப்பல் சேவை நேற்று தடைப்பட்டது


(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையிலிருந்து 300 பயணிகளுடன் நேற்றையதினம் திருகோணமலை நோக்கிச் சென்ற கப்பல் சீரற்ற காலநிலையால் மீண்டும் காங்கேசன்துறைக்கு திரும்பியுள்ளது. காலநிலை சீரானதும் குறித்த பயணிகள் கப்பல் மூலம் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சுவாமி விவேகானந்தரின் ஜன்ம தினமலர் - 10.01.2007



அதிவணக்கத்துக்குரிய சுவாமி வீரேஸ்வரானந்தர் மகராஜ் முன்னை நாள் 10ஆவது தலைவர். ஸ்ரீராமகிருஷ்ண மடம், சங்கம், பேலூர் மடம், கொல்கத்தா அவர்களின் திருவடியில் இம் மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

## எனது போர் முறை

அதிகாரம் உலக நாடுகளை இதற்கு முன் எப்போதும் இல்லாத வகையில் இணைத்திருக்கிறது. ஆங்கிலேயர்களின் சாலைகளும் தொடர்பு வசதிகளும் உலகின் ஒரு மூலையிலிருந்து மறுமூலைவரை பரவியுள்ளது. ஆங்கிலேய அறிவுத்திறனின் காரணமாக இன்றைக்கு உலகம் இதுவரை கண்டிராத வகையில் இணைக்கப்பட்டுள்ளது. மனித வரலாறு கண்டிராத அளவிற்கு இன்று வியாபார மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

அறிந்தோ ,அறியாமலோ இந்தியா உடனடியாக எழுகிறது. தனது ஆன்மீகச் செல்வங்களை மழை எனப் பொழிகிறது. அந்தப் பெருவெள்ளம் இந்தப் பாதைகளின் வழியாக பாய்ந்து சென்று உலகின் மறு கோடியை அடைகிறது. நான் அமெரிக்கா சென்றது என் செயல் அல்ல. உங்கள் செயலும் அல்ல. இந்தியாவின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற இறைவன் தான் என்னை அனுப்பினார். என்னைப் போன்ற நூற்றுக்கணக்கானோரை எல்லா நாடுகளுக்கும் அனுப்பப் போகிறார் . உலகின் எந்த சக்தியாலும் இதைத் தடுக்க முடியாது. இதையும் செய்தாக வேண்டும். உங்கள் மதத்தை பிரச்சாரம் செய்வதற்காக, நீங்கள் நாட்டை விட்டு வெளியே செல்ல வேண்டும். சூரியனின் கீழ் உள்ள ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு மனிதரிடமும் அதை பிரச்சாரம் செய்தாக வேண்டும் . நாம் செய்ய வேண்டிய முதல் வேலை இது தான். ஆன்மீக ஞானத்தைப் போதித்தால் அதன் பின்னர் உலக அறிவும் நீங்கள் விரும்புகின்ற மற்ற எல்லா அறிவும் உங்களைத் தொடர்ந்து வரும். ஆனால், மதத்தை விலக்கிவிட்டு வேறு எந்த அறிவைப் பெற நீங்கள் முயன்றாலும் இந்தியாவில் உங்கள் முயற்சி வீண் என்பதை தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன். அது மக்களிடம் எந்தத் தாக்கத்தையும் ஒரு போதும் ஏற்படுத்தாது . மகத்தான பௌத்த இயக்கத்தின் தோல்விக்குக் கூட இதுவும் ஒரு காரணம்.

எனவே என் நண்பர்களே, நம் சாஸ்திர உண்மைகளை இந்தியாவிலும் வெளியிலும் பிரச்சாரம் செய்ய நமது இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக இந்தியாவில் சில இயக்கங்களை துவக்குவது தான் என் திட்டம். மனிதர்கள், மனிதர்கள் தான் தேவை ! மற்ற எல்லாம் தயராகிவிடும். ஆற்றல் மிக்க தீவிரமான நம்பிக்கை உள்ள மனச்சாட்சிக்கு மாறாக நடக்காத இளைஞர்கள் இத்தகைய நூறு பேர் போதும், உலகையே புரட்டிவிடலாம் . எல்லாவற்றையும் விடவும் சங்கல்பம் வலிமை வாய்ந் தது. அதன் முன் எல்லாம் அடிபணிந்தே ஆகவேண்டும். ஏனெனில் அது கடவுளிடம் இருந்து மட்டுமே வருகிறது. தூய ஆற்றல் மிக்க சங்கல்பம் எல்லாம் வல்லது. உங்களுக்கு இதில் நம்பிக்கை இல்லையா?

பரப்புங்கள், உங்கள் மதத்தின் மகத்தான உண்மைகளை உலகம் முழுவதும் பரப்புங்கள். உலகம் அவற்றிற்காக காத்திருக்கிறது. மக்களை இழிந்தவர்களாக்கும் கொள்கைகளே பல நூற்றாண்டுகளாகப் போதிக்கப்பட்டு வந்துள்ளன. மக்கள் எதற்குமே உதவாதவர்கள் என்று போதிக்கப்பட்டுள்ளனர். உலகம் முழுவதுமே , பாமரர்கள் என்றால் அவர்கள் மனிதர்களே அல்ல என்று தான் அவர்களிடம் கூறப்பட்டு வந்துள்ளது. பல நூற்றாண்டுகளாக பயமுறுத்தி பயமுறுத்தியே அவர்கள் ஏறக்குறைய மிருகங்கள் ஆகிவிடும் நிலைக்குச் சென்று விட்டனர். ஆன்மா என்ற ஒன்றைப்பற்றி கேள்விப்பட அவர்கள் அனுமதிக்கப்படவேயில்லை. அவர்கள் ஆன்மாவைப்பற்றி கேள்விப்படட்டும். தாழ்ந்தவருள் தாழ்ந்தவரிலும் ஆன்மா உள்ளது. அது இறப்பதோ பிறப்பதோ இல்லை. அந்த ஆன்மாவை வாள் வெட்ட முடியாது. நெருப்பு எரிக்க முடியாது. அது தோற்றமும் ,முடிவும் இல்லாதது. முற்றிலும் தூய்மையானது. எல்லாம் வல்லது! எங்கும் நிறைந் தது.

முதலில் உங்களிடமே உங்களுக்கு நம்பிக்கை வேண்டும் . உங்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் உள்ள வித்தியாசம் தான் என்ன? தங்கள் மதம், கடமை என்றெல்லாம் அவர்கள் என்ன வேண்டுமானாலும் பேசட்டும். அந்த வித்தியாசம் என்னவென்று தெரிந்துவிட்டது. அது இது தான். ஆங்கிலேயன் தன்னை நம்புகிறான். நீங்கள் உங்களை நம்பவில்லை. தான் ஆங்கிலேயன். எனவே தான் விரும்புகின்ற எதையும் தன்னால் செய்யமுடியும் என்பதை அவன் நம்புகிறான் . அது அவனுள் இருக்கும் தெய்வீக சக்தியை வெளிப்படுத்துகிறது. அவனும் தான் விரும்பியதை செய்து முடிக்கிறான் . ஆனால் உங்களால் எதுவுமே செய்யமுடியாது என்று தான் உங்களுக்குச் சொல்லப்படுகிறது. போதிக்கப்படுகிறது. நீங்களும் நாளுக்கு நாள் எதற்குமே பயனற்றவர்களாகி வருகிறீர்கள். நமக்குத் தேவை வலிமையே. எனவே உங்களிடம் நம்பிக்கை கொள்ளுங்கள்.

நாம் பலவீனர்களானோம், அதனால்தான் ரகசிய வாதங்களும் ரகசிய வித்தைகளுமாகிய அற்ப விஷயங்கள் எல்லாம் நம்மிடம் வந்தன. அவைகளில் சிறந்த உண்மை கூட இருக்கலாம். ஆனால் அவை ஏறக்குறைய நம்மை அழித்தே விட்டன. உங்கள் நரம்புகளை வலி மையாக்கிக் கொள்ளுங்கள். இரும்பாலான சதையும் எஃகாலான நரம்புகளுமே நமக்குத் தேவை. காலம் காலமாக அழுதுவிட்டோம். இனியும் அழுகை கூடாது. சொந்தக் காலில் நில்லுங் கள், மனிதர்கள் ஆகுங்கள், மனிதனை உருவாக்குகின்ற ஒரு மதமே நமக்குத் தேவை. மனிதனை உருவாக்குகின்ற கொள்கைகளே நமக்குத் தேவை! எல்லா வகையிலும் மனிதனை உருவாக்கும் கல்வியே நமக்கு வேண்டும் . (சென்னையில் பேசிய சொற்பொழிவிலிருந்து)

## சுவாமி விவேகானந்தரின் அபிலாஷை என்ன?

சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து 100 வருடங் களுக்கு மேலாகிறது. நாம் அவரது சிலைக்கு இன்னும் சரியான இடம் கொடுக்கவில்லை. சுவாமிஜி என்று இவரை ராம கிருஷ்ண சங்கத்தில் அன்பாக அழைப்பார்கள். யாழ்ப்பாணச் சொற்பொழிவில் தானங்களில் முதன்மையானது ஆன் மீக தானம் என்றார். 100 நிமிடங்கள் சுவாமிஜி பேசிய சொற்பொழிவை அன்று இதனை 4000 பேர்கள் செவிமடுத்தனர்.

இங்கு சுவாமிஜி பேசிய உரையின் தலையங்கம் "நமது அடிப்படை" இந்திய நாடு உலகில் ஆன்மீகம் தழுவிய நாடாக இருப்பது யாவரும் அறிந்ததே. சமய குரவர்கள், ஆழ்வார்கள், ர்ாமர், கிருஷ்ணர் ,ராமகிருஷ்ணர், புத்தர் போன்ற அவதாரபுருடர்கள் அடங்கிய நாடு தான் இந்தியா. திருமூலர், வடலூர் வள்ளலார், தாயுமானவர் இதனைத் தவிர இராமலிங்கர், அரவிந்தர் , புரந்தரதாசர், ஆதிசங்கரர்,குரு நானக், ஞானேஸ்வரர், சைதன்யமகாபிரபு, பக்தமீரா இப்படி கணக்கில் அடங்கா தவசிரேஷ்டர்கள் அடங்கிய நாடு.

ஆத்மீகம் சமயப்பிரசங்கம் அல்ல. சாதாரணமான ஆலய வழிபாட்டில் அடங்கா சமயம் என்பது அனுபூதி , Realisation சுவாமிஜி " Religion is Realisation,-it is being and becoming" அருணகிரிநாதனின் வாக்கின்படி "பேசா அனுபூதி பிறந்ததுவே" இதனைக் கொஞ்சம் சிந்திப்போமாக.

"கடையை விரித்தோம்
கொள்வார் இல்லை
கடையை மூடினோம்"
(இராமலிங்க சுவாமிகள்)

இது என்ன புத்தகக் கடையா? அல்லது சாப்பாட்டுக் கடையா? சிந்தித்து தெளிவு பெறுங்கள்.

சுவாமி விவேகானந்தரை அன்று 15000 பக்தர்கள் எதிர்கொண்டு சிவபெருமானுக்கு கொடுக்கக்கூடிய உபசாரத்தை கொடுத்து யாழ் . நகருக்கு அழைத்துவந்தார்கள் . எங்கும் மகாதேவா என்ற குரல் பஞ்சாலாத்தி , கற்பூரதீபம் இன்று எங்களுக்கு ஏற்பட்ட நிலை பற்றி சரியான மனக்கவலை. இரவில் சரியான நித்திரை செய்யமுடியவில்லை. முன்பு இருந்த நல்ல நிலை திரும்ப வரும். அதற்கு தாங்கள் தியாக மனப் பான்மை, மனிதநேயம், சகோதரத்துவம், அன்பு இதனை விதைக்க வேண்டும். எங்கள் கருத்துக்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவை.

சிவனை நினைந்தவர் எவர் தாழ்ந்தார்?
சிவனை மறந்தவர் எவர் வாழ்ந்தார்?

சிவ சிவ

## சுவாமி விவேகானந்தரிடமிருந்து நாம் என்ன கற்கவேண்டும்?

* தியாகம் , தெளிவான சிந்தனை முயற்சி.
* உண்மை , திடசங்கல்பம், உழைப்பு .
* நிஷ்டை ,அமைதியான மனம் ,வினயம்.
* தன்னடக்கம், தன்னம்பிக்கை, சேவை மனப்பான்மை.
* தன்னிறைவு, பயமின்மை, கருணை.
* நல்லொழுக்கம் ,சகிப்புத்தன்மை, தன்னலமின்மை.
* இறையன்பு, சிரத்தை, சுய மரியாதை.
* பொறுமை, நன்றி , பலம், தைரியம் !

வெளியீடு-ஸ்ரீ ராமகிருஷ்ணமடம் மயிலாப்பூர் , சென்னை 600004

**ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் , பருத்தித்துறை.**

குற்றமற்றவரை–ஒன்றும் அறியாதவரை–நிராகரித்துக் கண்டிப்பது எவ்வளவு வெட்கக்கேடான காரியம்?

–சோக்ரட்டீஸ்

வலம்புரி

# யாழ். மக்களை உலுப்பும் 'கடத்தல்' பயங்கரம்

யாழ்.குடாநாட்டில் நாளுக்கு நாள் கடத்தல் சம்பவங்களும், காணாமல் போதலும் நடந்த வண்ணமுள்ளன.

யாரால் கடத்தப்படுகின்றார்கள்? கடத்தப்பட்டவர்களை எங்கே வைத்திருக்கின்றார்கள்? கடத்தியமைக்குக் காரணம் என்ன? என்பது எதுவுமே தெரியாத நிலையில் யாழ்.குடாநாட்டு மக்கள் மிகப் பெரும் பயங்கரமான சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இரவுப் பொழுதென்பதும் இளைஞர்களை வீட்டில் வைத்திருக்கும் பெற்றோர் நடுங்குகின்றனர்.காரணகாரியமின்றி எதுவும் நடக்கலாம் என்ற பயமே அதற்கான காரணமாகும்.

இரவுவேளைகளில் வெள்ளை வானில் வருவோர் வீட்டிற்குள் புகுந்து இளைஞர்கள், மாணவர்களைக் கடத்திச் செல்கின்றனர்.

இவ்வாறு கடத்தப்பட்டவர்களில் சிலர் சடலமாக மீட்கப்பட்டதும்,பலரின் விபரம் தெரியாமல் இருப்பதும் யாழ்ப்பாணத்தின் தற்போதைய அவல நிலையாகவுள்ளது.

உணவுத் தட்டுப்பாடு, தொழிலிழப்பு, தொற்று நோய்த் தா,க்கம் என்பனவற்றினூடே, கடத்தல்களும், காணாமல் போதல்களும் குடாநாட்டு மக்களை வாட்டிவதைக்கின்றன.

தடுப்பாருமில்லை, தட்டிக் கேட்பாருமில்லாத நிலையில் குடாநாட்டு மக்களின் அவலநிலையை யாழ்ப்பாணத்தில் இயங்கும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்களே உலக அரங்கிற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

1995 இல் ஏற்பட்ட இடப்பெயர்வுகளுக்குப் பின்னர், இராணுவக்கட்டுப்பாட்டுக்குட்பட்ட யாழ்ப்பாணத்திற்கு திரும்பிய மக்கள் அப்போது அனுபவித்த பயங்கரத்தை இப்போதும் அனுபவிக்கின்றனர்.

1996 ஆம் ஆண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் மீள்குடியேற வந்தவர்களில் சுமார் அறுநூறு பேர் காணாமல் போயினர். அவர்களுக்கு என்ன நடந்ததென்பதை அறிவதற்காக கடந்த பத்து ஆண்டுகளாக காணாமல் போனவர்களின் உறவினர்கள் அலைந்து திரிவதும், ஆற்றொணாத் துயரமேலீட்டால் கண்ணீர் விட்டுக் கதறுவதும் இன்னமும் தொடர்கதையாகவே உள்ளது.

96களில் காணாமல் போனவர்களின் பட்டியலுடன் நடைபெறும் தேடுதலுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாத நிலையில், இப்போது அதேபட்டியல் மீளவும் தயாராகின்றது.

யாழ்.குடாநாடு இராணுவக் கட்டுப்பாட்டிற்குட்பட்டதாக இருக்கும்போது காணாமல் போதல், இரவுவேளைகளில் கடத்தப்படுதல் போன்ற சம்பவங்களுக்குப் பொறுப்புக் கூறும் தார்மீகக் கடமை படையினருக்கே உண்டு.

யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறுவதாயின், பாதுகாப்புப் பயண அனுமதி பெற்றாக வேண்டும்.இதனை வழங்குவதும், வழங்காமல் விடுவதுமான தீர்மானத்தை படையினரே மேற்கொள்கின்றனர். இது குடாநாட்டு மக்களின் அடைபட்ட வாழ்விற்கான நியதியாகும்.

ஏ-9 பாதை மூடப்பட்டு குடாநாட்டிற்கான போக்குவரத்தைத் தடை செய்து கொண்டு, இரவு வேளைகளில் கடத்தல் நாடகம் அரங்கேற்றப்படுவது உடனடியாகத் தடுக்க வேண்டியதாகும்.

இதுவிடயத்தில் அரசு உடனடியான நடவடிக்கை எடுக்கத் தவறினால் நிலைமை மிக மோசமாவது தவிர்க்க முடியாததாகி விடும்.

# புலிகளின் கிளிநொச்சி-முல்லைத்தீவு முகாம்கள் மீது தாக்குதல் நடத்த வேண்டும்

## புஷ், பிளேயர் கொள்கையைப் பின்பற்றுமாறு ஹெலஉறுமய கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளை வேரோடு அழித்துவிட வேண்டும். விடுதலைப்புலிகளின் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு முகாம்களைத் தேடிச் சென்று தாக்குதல் நடத்த வேண்டும். பயங்கரவாதத்தை அழிக்க எமது அரசாங்கம் புஷ்,பிளேயர் கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் தமக்கு ஏற்பட்டு வருகின்ற தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியாத விடுதலைப்புலிகள், அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்த ஆரம்பித்துள்ளனர். பாதுகாப்புப் படைகள் வடக்குக் கிழக்கில் புலிகள் மீது பாரிய தாக்குதல்களை நடத்திவருகின்றன.

இந்நிலையில் நாட்டின் ஏனைய பகுதிகளில் தாக்குதல்களை நடத்தி படைகளை அப்பிரதேசங்களுக்கு அனுப்பி வைத்துவிட்டு வடக்குக் கிழக்கில் தாக்குதல்களை நடத்த புலிகள் முயற்சிக்கின்றனர்.

அத்துடன் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்துவதன் மூலம் இராணுவத்தின் தாக்குதல்களை நிறுவத்துவதற்கான அழுத்தத்தை புலிகள் முன்வைக்க முயற்சிக்கின்றனர். இந்நிலையில் புலிகளின் தாக்குதலுக்கு அச்சமடைந்து, இராணுவம் மேற்கொள்ளும் தாக்குதல்கள் நிறுத்தப்படக் கூடாது.

விடுதலைப்புலிகள் வேரோடு அழிக்கப்பட வேண்டும். இதற்காக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் மற்றும் பிரித்தானியப் பிரதமர் பிளேயர் ஆகியோரின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை உதாரணமாகக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு கட்டடத்திலும் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய முடியாது. மாறாக பயங்கரவாதிகளைத் தேடிச் சென்று அழிக்க வேண்டும் என்று அமெரிக்க வர்த்தகக் கட்டடம் தாக்கப்பட்டதும் புஷ் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் எமது நாட்டிலும் ஒவ்வொரு பஸ்களுக்கும் பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருக்க முடியாது. அதற்குப் பதிலாக புலிகளின் முகாம்களைத் தேடிச்சென்று அழிக்க வேண்டும்.

புலிகளின் தாக்குதல்களுக்கு அச்சமடைந்து சாதாரண மக்களின் வாழ்க்கை முறைக்கு இடையூறுகளை விளைவிப்பது அர்த்தமற்றதாகும். புலிகள் சிங்கள, தமிழ் இனக்கலவரத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். எனவே மக்கள் மிகவும் பொறுமையுடன் இருக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# அமைச்சரவை மறுசீரமைப்பு ஜனாதிபதி மேற்கொள்வார்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அமைச்சரவை மறுசீரமைக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் நேற்று அறிவித்துள்ளது.ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்வாங்குவதன் மூலம் தமது சிறுபான்மை அரசைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சி, இணைந்த அமைச்சரவை அமைக்கும் அரசின் திட்டத்தை நிராகரித்ததுடன் அரசினால் தமது கட்சி உறுப்பினர்கள் உள்வாங்கப்படுவது இரு கட்சிகளும் அண்மையில் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முறிவடையச் செய்யும் என்றும் எச்சரித்திருந்தது.

எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அதிகமானோர் அரசின் அமைச்சரவையில் இணைந்து கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மகிந்தவின் மூத்த உதவியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் மகிந்தவின் சுதந்திரக்கட்சி 70 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. ஆனால் 2005 ஆம் ஆண்டு மகிந்த பதவியேற்ற பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஐந்து முக்கிய உறுப்பினர்கள் அரசு பக்கம் தாவியுள்ளனர்.

ஜனாதிபதி ஏன்அதிகளவான ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களை அமைச்சரவையில் சேர்க்க ஆவலாய் உள்ளார் என்று தனக்குத் தெரியாது எனவும், ஆனால் இது அரசிற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையிலுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பாதிக்கும் எனவும் அதன் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி செயலகம் தக,வல் தெரிவிக்கையில், நாடாளுமன்றத்தில் சமநிலை மாறாதவரையில் பொதுத் தேர்தல் அவசியமற்றது என்று தெரிவித்துள்ளது. (ந-5)

# அடையாளம் காண முடியாத பொதிகள் பொதுமக்கள் தொடர்பு கொள்ள முடியும்

## யாழ்.பிராந்திய தபால் மா அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் பின்னர் கப்பல் மூலம் திருகோணமலையிலிருந்து செப்ரெம்பர்,ஒக்டோபர் மாதகாலப் பகுதிக்குள் எடுத்து வரப்பட்ட தபால் பொதிகளில் சிதைவடைந்த சுமார் 50 பொதிகள் அடையாளம் காண முடியாத நிலையில் விநியோகிக்கப்படாதுள்ளதாக யாழ்.மாவட்ட பிராந்திய தபால் மா அதிபர் எஸ்.குமரகுரு தெரிவித்தார்.

இப்பொதிகளுக்குள் உள்ள பொருட்கள் தொடர்பான விபரங்களினை தாம் சேகரித்துள்ளதாகவும், அக்காலப் பகுதியில் உறவினர்களால் பொதிகள் அனுப்பப்பட்டு இதுவரை கிடைக்கப் பெறாதவர்கள் அது பற்றிய விபரங்களை தமக்குத் தெரிவிப்பதன் மூலம் அவை உறுதிப்படுத்தப்படுமானால் அப்பொதிகளை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை இப் பொதிகளில் பழுதடைந்துள்ள பொருட்கள் யாவும் அகற்றப்பட்ட நிலையில் ஏனையவையே எஞ்சியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ந-3)

# அதிகாரப் பகிர்வுத் திட்டம் தொடர்ந்து பேசுவதென முடிவு

## ஐக்கிய தேசியக் கட்சியும் பங்கேற்பு

(கொழும்பு)

அனைத்துக் கட்சிக் குழுவின் தலைவரும் அமைச்சருமாகிய பேராசிரியர் திஸ்ஸ விதாரண சமர்ப்பித்த அதிகாரப் பகிர்வுத் திட்டத்தின் அடிப்படையில் தொடர்ந்து பேசப்போவதாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் நேற்றுமுன்தினம் கூடிய கூட்டத்தில் ஜே.வி.பி. பங்கேற்கவில்லை. இந்தக் கூட்டத்தில் திஸ்ஸ விதாரண சமர்ப்பித்த அறிக்கை முன்னைய கூட்டங்களில் அரசியல் கட்சிகளால் விவாதிக்கப்பட்ட அம்சங்களையும் உள்ளடக்கியதாகும்.

இரு மாதங்களுக்குள் இறுதித் தீர்வுத் திட்டம் தயாரிக்கப்படவேண்டும் என்று கூட்டத்தில் பேசும்போது அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார். முதற்தடவையாக ஐக்கிய தேசியக் கட்சியின் இரு பிரதிநிதிகளான முன்னாள் அமைச்சர் கே.என்.சொக்ஷியும், பேராசிரியர் ஜி.எல்.பீரிசும் கலந்து கொண்டனர்.

நாட்டின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாகவே அனைத்துக் கட்சிக் குழுவில் ஐக்கிய தேசியக் கட்சி பங்குபற்றியதாக அதன் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (ந-5)

# அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரத்தின் கணவரும், திருகோணமலை இலங்கை வங்கியின் ஓய்வு பெற்ற முகாமையாளருமான சி.சிவஞானசுந்தரத்தின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (ந)

# பௌதிகவியல் கருத்தரங்கு பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பௌதீகவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான, புதிதாகக் கிடைக்கப்பெற்ற பௌதீகவியல் உபகரணங்களின் செய்முறை தொடர்பாக எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறவிருந்த கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளதாகவும், அக் கருத்தரங்கு எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதாகவும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ந-3)

# கடந்த மூன்று தினங்களில் நால்வரைகக் காணவில்லை

## யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறையீடு

கடந்த மூன்று தினங்களில் இருவர் கடத்தப்பட்டும் இருவரை காணவில்லை என்றும் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மூத்தவிநாயகர் வீதி நல்லூரைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையாரான சீவரத்தினம் நிரஞ்சன் (வயது 30) என்பவரை கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 8.45 மணியளவில் வீட்டுக்கு வந்த சிலர் வீட்டுக்கதவை உடைத்து அவரை கடத்திச் சென்றனர் என உறவினர்களால் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை அன்று நள்ளிரவு 12.30 மணியளவில் சித்திவிநாயகர் கோயிலடி நாவற்குழி மேற்கைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான பூபாலசிங்கம் ரமேஸ்குமார் (வயது 28) என்பவரை அவரது வீட்டுக்குச் சென்றவர்கள் கடத்திச்சென்றுள்ளதாகவும் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் செய்யப்பட்டுள்ள மற்றுமொரு முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாவற்குழியில் கடத்தப்பட்ட ரமேஸ்குமார், நிரஞ்சனின் உறவினர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 6 ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் புடவை எடுக்க கடைக்குச் சென்ற முத்துமாரி அம்மன் கோவிலடி அல்வாய் வடக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் செல்வராசா (வயது 23) என்பவர் இதுவரை வீடு திரும்பவில்லை எனவும் கடந்த 7ஆம் திகதி மாலை 5 மணிக்கு உரும்பிராயிலுள்ள நண்பர் வீட்டுக்குச் சென்ற, நாவலர் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காந்தியழகன் சிறீசானந்த் (வயது 20) என்ற இளைஞன் இதுவரையும் வீடு திரும்பவில்லை எனவும் யாழ்.மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந-3,5)

## இராணுவ நடவடிக்கையில்...

ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். இது தொடர்பாக அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

நிட்டம்புவவிலும், ஹிக்கடுவையிலும் இடம்பெற்ற பேருந்து குண்டுவெடிப்புச் சம்பவங்களினால் பலர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். மேலும் பலர் படுகாயமடைந்து உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கின்றார்கள்.

இத்தகைய குண்டுத் தாக்குதல்களை நாம் கடுமையாகக்கண்டிக்கின்றோம். தெற்கில் பொதுமக்கள் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்துவதன் மூலமோ வடக்கில் மக்கள் மீது குண்டுகளைப் பொழிவதன் மூலமோ நெருக்கடிக்குத் தீர்வுகண்டுவிட முடியாது.

அத்துடன் கண்டனங்களும் ஆத்திர மூட்டும் செயற்பாடுகளும் நெருக்கடிக்குத் தீர்வாக முடியாது. பதிலுக்குப் பதில் கொடுப்பதும் பழிவாங்கும் செயற்பாடுகளும் நெருக்கடியை மேலும் மோசமடையச் செய்வதற்கே உதவும்.

இதன் காரணமாக வடக்கிலும் தெற்கிலும் வாழும் பொதுமக்கள் மட்டுமன்றி முழுநாடும் ஆபத்தான நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. எனவே நாம் தூரநோக்குடனும் பொறுமையுடனும் பிரச்சினைக்குத் தீர்வைத் தேடவேண்டும்.

கடந்த கால அனுபவங்கள் ,உலக நடைமுறைகள் போன்றவற்றை ஆழமாகக் கவனத்தில் கொண்டு ஆராய்ந்து தீர்வுத்திட்டம் ஒன்றை விரைவில் முன்வைக்க வேண்டும். எமது நாட்டுக்குப் பொருத்தமான தீர்வாக அது அமைய வேண்டும்.

அந்த அரசியல் தீர்வுத்திட்டமானது அதிகாரப்பரவலாக்கலை அடிப்படையாகக் கொண்டதாகவும் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களால் உடன்படக்கூடியதாகவும் அமைவது மிகவும் முக்கியமானதாகும்.

ஐக்கிய தேசியக்கட்சி மீண்டும், மீண்டும் வலியுறுத்திக்கூறுவது, பயங்கரவாத செயற்பாடுகளை ஒழித்துக்கட்டி மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டுமானால் தற்போதைய நெருக்கடிக்குப் பேச்சுவார்த்தைகளை உடன் ஆரம்பித்து சமாதான முயற்சிகளை முன் கொண்டு செல்லவேண்டும் என்பதே ஆகும்.

சமாதான முயற்சிகளை துரிதப்படுத்துவதற்காகவே புரிந்துணர்வு உடன்படிக்கையை ஆளும்கட்சியுடன் செய்துகொண்டிருக்கின்றோம். ஆனால், அந்த உடன்படிக்கையின் அம்சங்கள் எதுவும் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இச் சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்திக்கொள்வது அரசாங்கத்தின் கடப்பாடாகும் என்பதை கூறிவைக்க விரும்புகின்றோம். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-3,5)

## வடக்கு கல்வி...

ரஞ்சினி நடராஜபிள்ளையும் நியமிக் கப்பட்டுள்ளனர்.

சுகாதாரசேவைகள் மாகாணப் பணிப்பாளராக வடக்கு மாகாணத்திற்கு கிளிநொச்சி மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளராகவிருந்த வைத்திய கலாநிதி எஸ்.நந்தகுமார் நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை கிழக்கு மாகாணத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (ந-5)


## யாழ்.மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்
## மாற்றப்படாத காசோலைகளைக் கையளிக்கக் கோருதல்

அரை நூற்றாண்டிற்கு மேலாக சிறப்பாக இயங்கிவந்த மேற்படி சங்கத்தினை கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் 2006 நவம்பர் 20 ஆம் திகதி வரை நிர்வகித்து வந்தவர்கள் வங்கியில் போதிய காசு மீதி இல்லாத வேளைகளில் மேலதிகப் பற்றாக தனியாரிடம் காசோலைகளை வழங்கி கமிஷன் கழித்து மீதிப் பணத்தினைப் பெற்றதாகவும், சங்கத்தின் பெயரில் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி கிளைகளில் பேணப்பட்டு வந்த நடைமுறைக் கணக்குகள் யாவும் முடிவுறுத்தப்பட்டதால், தம்மிடம் வழங்கப்பட்ட காசோலைகள் இதுவரை மாற்றப்படாதிருப்பதாகவும், பெரும் எண்ணிக்கையானோர் மாநகர ஆணையாளரிடமும் எம்மிடமும் முறையிட்டுள்ளார்கள்.

திருப்தியற்ற மேற்படி செயற்பாடு காரணமாக 21.11.2006 முதல் ஒரு வருட காலத்திற்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் இயக்குநர் சபையொன்று நியமிக்கப்பட்டிருப்பதோடு,கடந்த கால பணச் சோர்வு பற்றிய கணக்காய்வும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் முன்னைய நிர்வாகத்தினரால் கையெப்பமிடப்பட்டு,சங்க அங்கத்தவர்களுக்கோ, தனியாருக்கோ வழங்கப்பட்டு இதுவரை மாற்றப்படாதுள்ள காசோலைகளின் முழுமையான விபரங்களை எதிர்வரும் 16.01.2007 ஆம் திகதிக்கு முன்னர் எம்மிடம் ஒப்படைத்து சங்கத்தின் கடந்த கால கணக்காய்வு சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்குமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

**ச.தனபாலசிங்கம்**
**செயலாளர்.**

**இ.இரத்தினசிங்கம்**
**தலைவர்.**


## இந்திய...

அதன் பின்னர் நேற்று மாலை 5.30 மணியளவில் அலரிமாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து 14 ஆவது சார்க் உச்சி மாநாட்டுக்கான உத்தியோக பூர்வ அழைப்பிதழை அவரிடம் கையளித்தார்.

இந்த சந்திப்பின் போது வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் விஜயதுங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் பின்னர் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் தனியாகச் சந்தித்து சுமார் அரை மணிநேரம் கலந்துரையாடினர். இச் சந்திப்பின்போது இரு நாட்டின் பரஸ்பர வர்த்தக, சமூக, பொருளாதார மற்றும் கலாசார மேம்பாடுகள், ஒத்துழைப்புகள் என்பவற்றுக்கு மேலாக, இலங்கையில் தற்போது காணப்படும் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள்-நிலைமைகள் தொடர்பாகவும் சமாதான முயற்சிகளின் தற்போதைய தேக்க நிலை தொடர்பாகவும் ஆராயப்பட்டதாக தெரியவருகிறது.

இதில் குறிப்பாக வடக்கு -கிழக்கு மாகாணங்களின் பிரிப்புத் தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்தும் ஜனாதிபதி மகிந்தவுக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. நேற்று இரவு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அளித்த இராப்போசன விருந்துபசாரத்திலும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி கலந்து தொண்டார். இதேவேளை இன்று காலை அவர் மாலை தீவுக்குப் பயணமாகிறார். (ந-5)

## யாழ்ப்பாண...

யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்க எம்மாலான முயற்சிகளைத் துரித கதியில் மேற்கொண்டு வருகின்றோம்.

மாணவர்களும், பெற்றோரும், நலன் விரும்பிகளும், பொது நிறுவனங்களும் இம் முயற்சிக்குத் தமது பேராதரவை நல்கி வருகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் கடந்த 03.01.2007 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் முதல் அருணகிரிநாதன் நிருபராஜ் என்ற பல்கலைக்கழக மூன்றாம் வருட மாணவன் காணாமல் போயுள்ளார்.

கொக்குவில் கிழக்கில் அமைந்த அவர் தங்கியிருந்த வீடு. அன்றைய தினம் முற்பகல் இனந்தெரியாதோரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறித்த வீட்டில் இருந்த போதே காணாமற் போனதற்கான தடயங்கள் உள்ளதாகவும் அவரது தாயார் முறைப்பாடு செய்துள்ளார்.

இந் நிகழ்வு எமக்கு மிகுந்த மனத்துயரைத் தந்துள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. காணாமற் போதல் ,கடத்தப்படல் என்பன மாணவர் மத்தியில் பீதியை உண்டுபண்ணுவதோடு இது நாகரிக ஒழுங்கு முறைகள் நடத்தைகளுக்கு அப்பாற்பட்டது மான நடவடிக்கையுமென்பதால் இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இச் சம்பவம் காரணமாக யார்? எப்போது? என்ன காரணத்துக்காக? எவ்விடத்தில் கடத்தப்படுவார்கள் அல்லது காணாமற் போவார்கள் என்ற தவிர்க்க முடியாத பீதி, மாணவர்களிடையே பரவியுள்ளதைக் [illegible]ாணக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறான அச்சம் நிறைந்த சூழ்நிலையில் மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பது மிகச் சிரமம் என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். மீண்டும் கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிக்குமாறு எமக்கு அழுத்தம் தந்து எமது நடவடிக்கைகளுக்குப் பூரண ஆதரவு தந்த மாணவர்கள் இன்று மனம் குழம்பிப் போயுள்ளார்கள்.

இதனால் திட்டமிட்டபடி எதிர்வரும் 22 ஆம் திகதி கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிப்பது கேள்விக்குறியாகியுள்ளது.

நிருபராஜ் அவர்கள் காணமற்போனமைக்குக் காரணமானவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் நிருபராஜை விடுவித்து கற்றல் செயற்பாடுகள் மேலும் தடைப்படாதிருக்க உதவுமாறு விநயமாகக் கேட்டுக் கொள்கிறோம்.

காணாமற் போதல், கடத்தப்படுதல் போன்ற நடவடிக்கைகளை முற்றாகக் கைவிடுமாறும் பல்கலைக்கழகச் செயற்பாடுகள் திட்டமிட்டபடி மீண்டும் ஆரம்பிக்கப்பட ஒத்துழைப்பு வழங்குமாறும் சகல தரப்பினரையும் விநயமாக வேண்டுகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)


## விசேட அறிவித்தல்

நாட்டின் தற்போதைய சூழ்நிலை கருதி **மரணஅறிவித்தல்கள்** குறைந்த கட்டணத்தில் வலம்புரியில் பிரசுரிக்க முடியும் என்பதை அறியத் தருகின்றோம்.

இல.3, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

நிர்வாகம்.


## கல்வியியலாளர் நேர்முகப்பரீட்சை இசுருபாயவில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கல்வியியலாளர் சேவையில் III வகுப்பிற்கு வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் அடுத்தமாதம் 6 ஆம் திகதி வரை இசுருபாயவில் நடைபெறுமென கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லைநடராசா அறிவித்துள்ளார்.

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்களும் அழைக்கப்பட்ட திகதிகளும் நேற்றைய வலம்புரியில் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

நேற்றைய பிரசுரிப்பில் ரி.தனேந்திரன் (யாழ்.சரவணை நாகேஸ்வரி ம.வி),ஏ.ரமேசன் (மூளாய் வீதி ,வட்டுக்கோட்டை), கே.திவாகரன் (யாழ்.மத்திய கல்லூரி), ரி.கிருஷாந்தன் (செட்டித்தெருலேன் நெல்லியடி) ஆகிய நால்வரினதும் பெயர்கள் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும். (ந-3)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று கவன ஈர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் நேற்று கவனஈர்ப்பு பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மாணவர்கள் காணமல் போனமை தொடர்பாக எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்தப் பணி நிறுத்தம் இடம் பெற்றது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒருவர் கடந்த 3 ஆம் திகதி காணாமல் போயுள்ளார். இது போன்ற நடவடிக்கைகளை தடுத்து சுமுகமான நிலையில் பல்கலைக்கழகத்தை இயங்கச் செய்வது குறித்து கவனம் செலுத்தப்படவேண்டுமென்று பணி நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ந-9)

## கல்வியியல் கல்லூரி டிப்ளோமா பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியில் தேசிய டிப்ளோமா இறுதிப் பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 9 மணிக்கும், செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி 9 மணிக்கும் நடைபெறவுள்ளதாக கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தெரிவித்துள்ளார்.

சகல பரீட்சார்த்திகளும் எதிர்வரும் 16 ஆம் திகதி கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந-9)

## அவசரகாலச்சட்டம் மேலும் நீடிப்பு

(கொழும்பு)

அவசர காலச்சட்டம் மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற இதற்கான வாக்கெடுப்பில் பிரேரணைக்கு ஆதரவாக 88 வாக்குகளும் எதிராக 9 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இப்பிரேரணைக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களித்தது. (ந-3)

## கிளைமோர்த் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஒஸ்மானியா முஸ்லிம் கல்லூரி ஆருகே நேற்று பிற்பகல் 1.45 மணியளவில் கிளைமோர்த்தாக்குதல் நடத்தப்பட்டது.

காவல் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை இலக்குவைத்து நடத்தப்பட்ட இத் தாக்குதலில் படுகாயமடைந்த இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் பலாலி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.01.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.